வலைபின்னல் மாற்றுமுறை

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## 1999 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, விசேட கல்விச் சேவைச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்

*(1999, பெப்புருவரி மாதம் 10 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*


1999, பெப்புருவரி மாதம் 12 ஆம் திகதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II** இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 7.50 தபாற் செலவு : ரூபா 3.50

***1999 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, விசேட கல்விச் சேவைச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்***

[*1999 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 10 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.*]

*ச.வ.-ஓ.18/95.*

**விசேட கல்விச் சேவைச் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கான தொரு சட்டம்**

*"விசேட கல்விச் சேவைச் சங்கம்" என அழைக்கப்படுவதும், அறியப்படுவதுமானதொரு சங்கம், அதன் உறுப்பினர்களால் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட விதிகளுக்கமைய கூறப்பட்ட சங்கத்தின் குறிக்கோள்களுடன் தொடர்புடைய அனைத்துக் கருமங்களையும் பயனுறும் வகையில் நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துடன் தங்காலை பொலொம்மாறவில் ஏற்கனவே உருவாக்கப்பட்டிருந்ததாலும்:* *முன்னுரை.*

*சொல்லப்பட்ட சங்கமானது அது உருவாக்கப்பட்டிருப்பதற்கான நோக்கங்களையும் கருமங்களையும் வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டு நடாத்தியும் வந்திருப்பதாதலாலும், அது கூட்டிணைக்கப்படுவதற்கு விண்ணப்பித்திருப்பதாதலாலும், சொல்லப்பட்ட சங்கம் கூட்டிணைக்கப்படுவது பொதுமக்கள் நன்மைக்கு உகந்ததாகையாலும் :*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக* :—

***1***. *இச்சட்டம், 1999 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, விசேட கல்விச் சேவைச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.* *சுருக்கப்பெயர்.*

***2***. *இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும், (இதனகத்துப்பின்னர் "சங்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) விசேட கல்விச் சேவைச் சங்கத்தின் தற்பொழுது உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக் கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தபானம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "விசேட கல்விச் சேவைச் சங்கம்" என்னும் பெயரின் கீழும் மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும். அத்துடன் அது அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டதாதலும் வேண்டும்.* *விசேட கல்விச் சேவைச் சங்கத்தைக் கூட்டிணைத்தல்.*

H - 022545

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(அ) கல்விச் சேவைகளுக்கு ஏற்பாடு செய்தல் மூலமும் சமூக சேவைகளில் ஈடுபடச் செய்தல் மூலமும் பலவீனமுற்றவர்களுக்கு புனர்வாழ்வளித்தல் ;

(ஆ) பலவீனருக்கு அன்பளிப்புகளை வழங்குதல் ;

(இ) இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டோருக்குத் தேவையான உதவியையும் உறுதுணையையும் வழங்கல் ;

(ஈ) பலவீனரின் உரிமைகளைப் பாதுகாத்தலும் பேணுதலும் ;

(உ) பலவீனமுற்ற ஆட்களுக்கு போஷாக்குமிகுந்த உணவு, மருத்துவ வசதிகள், தொழிற்பயிற்சி மற்றும் தொழில் வசதிகள் போன்றவற்றிற்கு ஏற்பாடு செய்தல் ;

(ஊ) நூல் நிலையங்களை நிறுவிப் பேணுதல், நூல்கள், சஞ்சிகைகள், ஞாபகார்த்த வெளியீடுகள் மற்றும் பருவ சஞ்சிகைகள் போன்றவற்றிற்கு ஒப்பப்பணம் செலுத்துதலும் அவற்றை விநியோகித்தலும் ;

(எ) கண்காட்சிகள், சொற்பொழிவுகள், கருத்தரங்குகள், ஆய்வரங்குகள், வேலைக்களங்கள், வகுப்புகள், விவாதங்கள், மாநாடுகள், சம்மேளனங்கள், சுற்றுலாக்கள், உல்லாசப்பயணங்கள் என்பவற்றை ஊக்குவித்தல், ஒழுங்குபடுத்தல், முறைமைப்படுத்துதல், நடாத்துதல் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக் கோள்களைக் கொண்ட வேறு ஏதேனும் மன்றங்கள், சங்கங்கள் அல்லது அமைப்புக்களுடன் கூட்டிணைத்தலும், ஒத்துழைத்தலும் ;

(ஐ) மேற்குறித்த குறிக்கோள்களை எய்துவதற்கு உகந்தனவாக அல்லது இடை நேர்விளைவாக இருக்கக் கூடிய வேறெவையேனும் காரியங்களையும் கருமங்களையும் செய்தல்.

**4.** இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையேனும் ஒன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மையதுமான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவத்துள் வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பவற்றுக்கும் பிணைப் பொறுப்புடன் அல்லது பிணைப் பொறுப்பின்றி பணங்களைக் கடன் பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும், மானியக் கொடைகளையும் நன்கொடைகளையும் பெறுவதற்கும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஆளணியினரை வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்கல் என்பவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.*

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமைய அத்தகைய விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டு அவற்றிற்கிணங்கத் தெரிவு செய்யப்படக்கூடியவாறான அத்தகைய விதிகளில் ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறான அத்தகைய உறுப்பினர்களைக் கொண்டமைந்த முகாமைச் சபை ஒன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்*

(2) இச்சட்டத்திற்கான அட்டவணையில் பெயர் குறித்துரைக்கப்பட்டுள்ள கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைச் சபை, இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கின்றவர்களான சங்கத்தின் முகாமைச் சபையாதல் வேண்டும்.

**6.** (1) காலத்துக்குக்காலம் ஏதேனும் பொதுக் கூட்டத்திலும் சமூகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத பெரும்பான்மை கொண்டும் பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்குமாகவும் அல்லது அவற்றுள் எதற்காகவும், இச்சட்டத்தினது அல்லது எழுத்திலான வேறு சட்டத்தினது ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்ட முறை யானதாதல் வேண்டும் :—

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்*

(அ) உறுப்பாண்மையை வகைப்படுத்தலும் உறுப் பினர்களைச் சேர்த்துக் கொள்ளுதலும் உறுப்பினர்கள் விலகுதலும் அவர்களை விலக்குதலும்;

(ஆ) பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல், பதவி தாங்குநர் பதவியிலிருந்து விலகுதல் அல்லது பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதலும் அவர்களின் தத்துவங்களும், நடத்தையும்,கடமைகளும் ;

(இ) நிர்வாகசபை உறுப்பினர்களைத் தெரிவுசெய்தலும் அவர்களின் ஒழுக்கமும், கடமைகளும், பணிகளும் நிர்வாகசபையின் தத்துவங்களும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவல்கள், முகவர்கள் அத்துடன் சேவையாளர் என்போரின் தத்துவங்களும் ஒழுக்கமும், கடமைகளும் பணிகளும் ;

(உ) நிர்வாகசபைக் கூட்டங்களைக் கூட்டுதல், நடாத்துதல், அக்கூட்டங்களில் கவனிக்கப்படவேண்டிய நடவடிக்கைகள், அத்தகைய கூட்டங்களின் திகதி, நேரம், இடம், அறிவித்தல், நிகழ்ச்சி நிரல், கூட்ட நடப்பெண் அத்துடன் கூட்டங்களில் கருமமாற்றல் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனங்களை நிருவகித்தலும், முகாமைசெய்தலும், அதன் நிதிகளின் கட்டுக்காப்பும், அதன் கணக்குகளைப் பேணுதலும், கணக்காய்வு செய்தலும் ;

(எ) பொதுவாக, கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்வதற்கும் அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்படும் விதி எதுவும் அதே போன்ற கூட்டத்திலும் அதே முறையிலும் (1) ஆம் உட்பிரிவின் விதியொன்றென்றாற்போன்று திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் சகல உறுப்பினர்களும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**7.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் கொடை. இறுதி விருப்பாவணக் கையளிப்பு, நன்கொடைகள், ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் அல்லது கட்டணங்கள் அல்லது வழங்கல்களாகக் கிடைக்கக்கூடிய எல்லாப் பணங்களும், முகாமைச் சபை தீர்மானிக்க வேண்டியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் பெயரில் வைப்பிலடப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனங்களின் ஆதனங்களை மறுசீரமைப்பதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும் அல்லது சீராக்குவதற்குமாக கூட்டுத்தாபனம் ஏதேனும் தேய்மான நிதியத்தை, ஒதுக்கை அல்லது கடனாழ் நிதியத்தை உருவாக்கலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும், பணிகளையும் செயற்படுத்துவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட எல்லாச் செலவினங்களும் கூட்டுத்தாபன நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*சங்கத்தினால் செலுத்தப்படற் பாலனவையும் சங்கத்திற்குச் செலுத்தப்படற் பாலனவையுமான கடன்கள்.*

**8.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று சங்கத்தின் எல்லாக் கடன்களும், பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்பட வேண்டுமென்பதுடன், சங்கத்திற்குக் கிடைக்கவேண்டிய எல்லாக் கடன்கள், ஒப்பப்பணங்கள், உதவு தொகைகள் என்பன யாவும் கூட்டுத்தாபனத்ததுக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம்.*

**9.** கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, அளிப்பு, நன்கொடை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு அல்லது வேறேதேனும் விதமாகக் கிடைக்கக்கூடிய ஏதாவது அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தைப் பெறவும் வைத்திருக்கவும் சட்டப்படி இயலக்கூடியதாகவும் தகுதியுடையதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனங்களை இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் அப்போதைக்கு வலுவிலிருக்கும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்கக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவுள்ள முழுத் தத்துவத்துடன் அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

*கலைக்கப்பட்ட தன்மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்.*

**10.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன் மீது அதன் எல்லாக் கடன்களையும், பொறுப்புகளையும் கொடுத்துத் தீர்த்த பின்னர், எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபன உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படல் ஆகாது. கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களையுடையதும் அதன் அல்லது அவற்றின் விதிகளின்படி அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பங்களித்தல் தடைசெய்யப்பட்டுள்ளதுமான அல்லது தடைசெய்யப்பட்டுள்ளனவுமான வேறு சங்கங்களுக்கு கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய சங்கம் அல்லது சங்கங்கள் கூட்டுத்தாபனம் கலைக்கப்படும் நேரத்தில் அல்லது அதற்கு நேர்முன்னர் கூட்டுத்தாபன உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**11**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, கௌரவ நிறைவேற்றுச் செயலாளரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும் என்பதுடன், கௌரவ தலைவர், கௌரவ நிறைவேற்றுச் செயலாளரின் முன்னிலையிலன்றி எத்தன்மைத்தான எச்சாதனத்திலும் பொறிக்கப்படல் ஆகாது. அவர்கள் சமுகமாயிருந்தமைக்குச் சான்றாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடல் வேண்டும். அத்தகைய கையொப்பமிடலானது எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*குடியரசினதும் ஏனையோர் களினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**12**. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசினது உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும், இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள்மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின் கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ, பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற் படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**13**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## *அட்டவணை* *(பிரிவு 5 (2))*

**முகாமைச் சபை**

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு. ஈ.ஏ.எஸ். திசாநாயக்க |
| உபதலைவர் | : | திரு. எச்.ரி. குசும்பால |
| நிறைவேற்றுச் செயலாளர் | : | திரு. டபிள்யு.ஆர். பெரேரா |
| செயலாளர் | : | திரு. டபிள்யு.ரி. பெரேரா |
| உதவிச் செயலாளர் | : | திரு. எஸ். லியனகம |
| பொருளாளர் | : | திரு. டபிள்யு.பி பெரேரா |
| முகாமையாளர் | : | திரு. பீ.வி. விஜயரத்ன |
| **குழு உறுப்பினர்கள்** | : | திரு. கே.வி. ஆரியசேன |
| | : | திரு. சுகத் ஹெட்டிகே |
| | : | திரு. டபிள்யு.ஏ. சிரிபால |
| | : | திரு. டபிள்யு.ஏ. பியசிறி |
| | : | திரு. பீ.எம். சிரிசேன |

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆம் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர். அரசாங்க வெளியீட்டலுவலகம் இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*